

# திருவருள்

## THIRUVARUL

ஆன்மீக அறிவியற் சஞ்சிகை

**2**



திருமலை அருள்மிகு பத்திர காளி அம்மாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருள்

**தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும். தர்மம் மறுபடி வெல்லும்**

## மரபுவழியில் ஒரு குளிர்மையான யுத்தம்

குளிர்மையான வரவேற்பு!
அறிவார்த்தமான அபிப்பிராயங்கள்.
தேவை-தேடல் இவைபற்றிய நியாயமான முறுவல் கலந்த முகமன்கள்,
மனதிலே ஒரு உற்சாகமான தென்றலை வீசியுள்ளன!
பல நண்பர்கள் சந்தாப்பத்திரத்தை உடனே நிரப்பி என்னை மகிழ்ச்சிப்பாலால் குளிப்பாட்டி மகிழ்வித்துள்ளனர்.
இவர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றிகள்.
சுதந்திரமான காற்றைச் சுவாசிக்கின்ற பூரணமான ஒரு நிலையில் நான் இப்பொழுது புளகாங்கிதம் அடைந்திருக்கின்றேன்.
என்ன செய்யப்போகின்றேன்?
தேவார திருவாசகங்களைப்பாடி உங்களைத் தூங்கவைப்பதும் சரியாகப்படவில்லை எனக்கு.
அதே நேரம் தேவார திருவாசகங்களைப் பாடாமல் உங்களை கவலைப்படவைப்பதும் என் நோக்கமல்ல.
இன்று கடவுளின் பெயராலும் ஆலயங்களின் பெயராலும் புலம் பெயர்ந்த நாடுகளில் மாறுவேடம் போட்டுக்கொண்டு திரியும் ஒரு சில பக்தப்பெருமக்களோடு யுத்தம் புரியப் போகின்றேன்.
புலம் பெயர்ந்த நாடுகளில் சமய கலாசார விழுமியங்களை சரியான முறையில் ஊன்ற வைக்கப்போகின்றேன்.
மக்களுக்கு ஆலயங்கள் தேவை என்பது எவ்வளவு முக்கியமோ அதேபோல ஆலயங்கள் அவர்களது அன்றாட பக்தி மார்க்க வழிபாடுகளுக்கு உபத்திரவமாக இருக்கக் கூடாது என்பதும் முக்கியம் தான் என்பதை உணர்த்தப் போகின்றேன்.
மரபு வழியாக கோயில் மணிச் சத்தங்களின் ஓசைகளின் மத்தியிலும் தேவார திருவாசகங்களின் வழி நடத்தலிலும் புடம்போட்டு வளர்க்கப்பட்ட எங்கள் வாழ்க்கை முறைகளை புதிய தலை முறை உன்னிப்போடு அவதானித்துக் கொண்டிருக்கின்றது என்பதை நாம் விளையாட்டாக எடுத்துவிட முடியாது.
எங்களுடைய ஒவ்வொரு அசைவும் அவதானமாக இருக்கவேண்டும்.
எங்கள் ஆலயங்களில் நடைபெறுகின்ற பதவிப்போர்களும் சுயமுன்னிலைப்போர்களும் இரசிக்கத் தகுந்தவையல்ல. அதே நேரம் இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற இளைய தலைமுறை கோயிலைத் தூக்கி எறிந்துவிட்டுப்போனாலும் வியப்பல்ல.
வெறுமனே யதார்த்த நிலைகளைப் புறக்கணித்துக் கனவுலகில் வாழ்பவர்களை தோலுரித்துக் காட்டுவதற்கான சில முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இம் முறை சமய அறிவை சிந்தனை நோக்கில் அறியக் கூடிய சில கட்டுரைகளும் நடைமுறைப்பிரச்சினைகள் சம்பந்தமான சில விளக்கங்களும் தரப்பட்டுள்ளன.
அபிப்பராயங்களை எழுதுங்கள்.
நன்றி
மு. நற்குணதயாளன்.

**57 Blandford Waye, Hayes, Middlesex England UB4 0PB Tel: 0208 573 0368**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைப்பக்கம்

# சைவப்பற்று

– பாரதிதாசன் –



இரும்புப் பெட்டியிலே இருக்கும் எண்பது லட்சத்தையும்
கரும்புத் தோட்டத்திலே வருடம் காணும் கணக்கினையும்
அருந்துணையாக இருக்கும் ஆயிரம் வேலியையும்
பெரும் வருமானம் கொடுக்கும் பிற சொத்துக்களையும்

எண்ணி எண்ணி மகிழ்ந்தே ஒரு நாள் எங்கள் மடாதிபதி
வெண்ணிறப் பட்டுடுத்திச் சந்தனம் மேனியெல்லாம் பூசிக்
கண்கவர் பூஷணங்கள் அணிந்து கட்டில் அறை நோக்கிப்
பெண்கள் பலபேர்கள் குலவிப் பின்வர முன் நடந்தார்!

பட்டு மெத்தை தனிலே மனமே பரவும் பூக்களின் மேல்
தட்டினிற் பட்சணங்கள் அருந்திச் சைவத்தை ஆரம்பித்தார்
கட்டிக் கரும்பினங்கள் சகிதம் கண்கள் உறங்கிவிட்டார்
நட்ட நடு நிசியில் கனவில் நடப்பது கேளீர்

நித்திரைப் பூமியிலே சிவனார் நேரில் எழுந்தருளிப்
புத்தம் புதிதாகச் சிலசொல் புகல ஆரம்பித்தார்
இத்தனை நாளாகப் புவியில் எனது சைவமதை
நித்த நித்த முயன்றே புவியில் நீளப் பரப்பிவிட்டாய்

மடத்தின் ஆஸ்தியெல்லாம் பொதுவில் மக்களுக்காக்கி விட்டேன்
திடத்தில் மிக்கவனே இனிநீ சிவபுரி வாழ்க்கை
நடத்துக என்றே சிவனார் நவின்றுபின் மறைந்தார்
இடி முழக்கவென்றே தம்பிரான் எண்ணம் கலங்கிவிட்டார்

தீப்பொறி பட்டதுபோல் உடலம் திடுக்கிட எழுந்தார
கூப்பிடு காவலரை எனவே கூச்சல் கிளப்பிவிட்டார்
வேண்டும் பொருள்கள் களவு போகுமென்றார்
மாப்பிள்ளை என்றனுக்கே இத்தகி மரணம் ஏதுக்கென்றார்

சொப்பனத்தை நினைத்தார் தம்பிரான் துள்ளி விழுந்தெழுந்தார்
ஒப்பி உழைத்ததில்லை சிறிதும் உடல் அசைந்ததில்லை
எப்படி நான் பிரிவேன் அடடா இன்பப் பொருளை எல்லாம்
தப்பிப் பிழைப்பதுண்டோ எனது எனத் துடித்தார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருமம்

கருமம் என்பது செயலாற்றல். இதை இயங்கு இயல் எனக் கூற லாம். இந்தச் செயலாற்றலின் மூலகாரணத்தை ஆராய்வோமானால், அது இந்த இயற்கை எனும் பிரபஞ்சத்தைக் கொண்டு நடத்தும் மூலதத்துவத்தின் லயமாகும். இதை பிரபஞ் சலயம் எனக் கூறியிருக்கிறார்கள் ஞானிகள். அவர்களின் கூற்றுப்படி இப்பிரபஞ்சத்திற்குக் காரணமான ஓம் நமசிவாய என்னும் மூல நாதங் களே பிரபஞ்சமாகும். இதில்

1. ஓம் நாதவடிவம்
2. நமசிவாய பூதல வடிவம்.

ஆகவே அவர்களின் கருத்துப்படி நாதமே பூதமாகி அது பூதத்தில் ஊடுருவிச் செறிந்து பூதத்தைச் செயற்படுத்துவதால் அதை பூதநாதன் எனக் கூறியிருக்கின்றார்கள்.

இதுபோலவே உயிரும் தன் உணர்வு என்னும் நாதத்தால் மனத்தின் மூலம் உடலை வளர்த்துக்கொண்டும் அதன் மூலம் தனது கருமத்தை ஆற்றிக் கொண்டும் இருக்கிறது. எனவே கருமம் என்பது உயிரின் உணர்வால் உருவாகும் மனத்தின் செயலாகும். இவ்விடத்து கருமம் என்பது மனத்தின் செயல் என்பது தெளிவாகின்றது. ஆகவே மனத்தின் செயலுக்க மையவே மனிதனின் வாழ்க்கை அமை கிறது. இதனால்தான் நம் முன்னோர் மனம் போல வாழ்வு எனக் கூறி இருக்கிறார்கள்.

இந்தக் கருமம் என்கின்ற மனம் எங் கிருந்து வந்தது?
இது உயிரோடு வந்தது. உயிர் எங்கிருந்து வந்தது?
அது எமது தந்தையிடமிருந்து வந்தது. ஆதலால் இந்த மனம் என்னும் கருமம் வாழை யடி வாழைபோல பாரம்பரியமாக கருமத்தைத் தொடர்ந்து கொண்டு வருகின்றது.
இவ்விதம் பிதாவழி வித்தின் மூலம் தொடர்ந்து வரும் கருமத்தை நமது முன்னோர் சஞ்சித கருமம் எனக் கூறியிருக்கிறார்கள். இது போலவே தாயின் கருவழி தொடரும் கருமத்தைப் பிராரத்துவ கருமம் எனக்கூறி இருக்கிறார்கள். இவ்விரு கருமங்களின் கலப்பால் உருவாகும் மூன்றாவது கருமத்தை ஆகாமிய கருமம் எனக் கூறியிருக்கிறார்கள்.

ஆகவே இந்தச் சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என்னும் மூன்றுவிதக் கருமங்களின் செயற்பாடு ஒரு சங்கிலித் தொடர்போல ஒவ் வொரு பிறவியிலும் வாழையடி வாழைபோல தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இந்தத் தொடர் கருமத்திற்கமையவே உயிரின் வாழ்வு நகர்கின்றது.

ஒரு உயிரின் வாழ்வுக்கு அதன் கருமம் என்னும் செயல் காரணமாக இருப்பது போல அந்த உயிர் வாழும் உடலிலுள்ள தாதுக்குள் ளும் அவை தொடர்ந்து வந்த பாரம்பரியத்துக் கமைய அவை தொடர்கிறது. இத்தாது வழித் தொடரை வினை என்று கூறி இருக்கிறார்கள். இவ்விதம் கருமம் என்னும் மனத்தின் செயற் பாடும் வினை என்னும் தாதுக்களின் வினை ஆற்றலும் இணைந்து நிகழ்வதை கருமவினை என புணர்த்திக் கூறியுள்ளார்கள். இதில் மனமாகிய நுண் நிலையின் செயலைக் கருமம் என்றும் தாதுக்களாகிய பருப்பொருளின் செயலை வினை ஆற்றல் எனவும் பாகுபடுத்திக் கூறப்படுகின்றது.
இந்தக் கருமவினை என்னும் மனிதமனத்தின் செயற்பாடு மாயையால் மூடப்பட்ட அறியாமை நிலையிலிருந்து ஆரம்பித்துப் பொறாமை, அவா, அகந்தை, பற்று, பாசம், அன்பு, காதல், பரவசம், சமாதி என படிநிலைகளை தன்னகத்தே கொண்டதாக இருக்கின்றது.

எமது மனம் என்னும் கருமம் காலங் காலமாக தம்மைத் தொடர்ந்து வருவதால் ஆகாமிய கருமத்தால் காலத்திற்குக் காலம் சேர்க்கப்பட்ட மன அழுக்கு தொடர்ந்து கொண்டே வருகின்றது. இவ்வித அழுக்கை அகற்றவும் மேலும் நமது மனதில் அழுக்குப்படியாது பாது காப்பதற்குரிய சிறந்த கலையே யோகம் தியானம் போன்ற மனத்துக்கண் மாசறுக்கும் அற்புதமான கலைகளாகும்.

வைத்திய கலாநிதி
அ. விசாகரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராணன் என்ற காற்று (பத்துவகையாக) விழிப்பு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் முதலான நிலைகளிற் சமமாக இயங்கிக் கொண்டிருப்பதனால் பிராணன் என்ற காற்று உயிராகுமோவென்ற ஐயம் எழுகின்றது. விழிப்பு நிலையிற்போற் கனவு,



உறக்கம் முதலான நிலைகளில் ஒருவர் உண்ணல் முதலான தொழில்களைச் செய்வதில்லை. பிராணனன் என்ற காற்று ஒருவரின் எல்லா நிலைகளிலும், உடலிற் சமமாக இயங்கும் தன் தொழிலைச் செய்கின்றதேயொழிய வேறு எத் தொழிலையும் செய்யும் ஆற்றலற்றது. எனவே விழிப்பு, கனவு முதலான நிலைகளிற் கருவிகளை ஒடுக்குவது அறிவுடைப் பொருளான உயிரேயாம். எனவே இக் கருவிகளை ஒடுக்குகின்ற முதலான செயல்களைச் செய்யும் உயிர் வேறொன்று என்பதனை சிவஞானபோதமும் சிவஞான சித்தியாரும் பின் வருமாறு கூறுகின்றன.

கண்படில் உண்டி வினையின்மையின் ஆன்மா உனது என்று சிவஞானபோத சூத்திரமும்

அறிந்திடும் பிராணன்றன்னை யடக்கியும் விட்டு மான்மா என்று சிவஞான சித்தியார் செய்யுளும் எடுத்து விளக்குவதனைக் கண்டு உணர்க.

இனி நாம் பெறும் அறிவு விளக்கமெல்லாம் நமது வினைப்பயனாக சுட்டியதாய் இருக்கும் அறியுமாற்றலின் வன்மை, மென்மைகளைப் பற்றியதாகும். இவ் அறிவாற்றலுக்கேற்பவே பிரபஞ்சப் பொருள்களின் விரிவு முதலான யாவற்றையும் அறிய இயலுகின்றது. இவ்வாறு ஓருயிர் அறியும் ஆற்றலை ஆன்மசிற் சக்தி என்பர். இவ்வான்மசிற் சக்தியானது உலகப் பொருட்களுடன் தானே நேராகக் கலந்து அறியும் சக்தியற்றது. (உயிருக்கு அனாதியே இந்த அறிவு மறைப்புண்டு. அதனாலேயே உடற் கருவிகளுடன் சேர்க்கப்பட்டது என்பதனை நாம் நினைவு கூரவேண்டும்.) எனவே உடலிற் தரப்பட்டுள்ள உட்கருவி, புறக் கருவிகள் என்பவற்றோடு தொடர்புகொண்டு அறிவைப்பெற்று நாளாந்தம் கிடைத்த பழைய அனுபவங்களுடனும் நினைவுகளுடனும் தொடர்புபடுத்திச் சிலவிடயங்களை நன்கு விளங்கிக் கொள்ள முயல்கின்றது. இவ்வாறு எம் உடலில் அறிவு நிகழ்ச்சிக்குரிய கருவிகளாக மனம், சித்தம், புத்தி அகங்காரம் எனும் உட்கருவிகளே இயங்குகின்றன. மனம் தன் முன்

திருமதி தனபாக்கியம் குலசிங்கம்

எதிர்ப்பட்ட பொருள்களை இது யாதோ? என்று ஐயப்படுகின்றது. சித்தம் சிந்திக்கின்றது. புத்தி விடயங்களை இது அது என நிச்சயிக்கின்றது. அகங்காரம் அபிமானித்து இன்னதெனத் தெளிந்து அறிகின்றது. இந்த உட் கருவிகளே கனவிலும் விழிப்பு நிலையிற் கவரப்பட்ட புறப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்களின் வாசனையால் விடயங்களை அறிய உதவுகின்றன. எனவே இந்த உட்கருவிகளே அறிவு நிகழ்ச்சிகளை அறிய உதவுவதனால் இவையே உயிராகுமோவென ஐயம் எழுகின்றது. ஏனெனில் இந்த உட்கருவிகளும் தம்முள் ஒன்று அறிந்தவற்றை மற்றது அறியாது. அவையும் தத்தம் தொழிலை மட்டுமே செய்யும் ஆற்றலுடையன. அதனோடு உயிர் உடலைவிட்டு நீங்கிய விடத்து இவற்றின் தொழிற்பாடுகள் எதுவும் நிகழ்வதில்லை. எனவே இவ் உட்கருவிகள் நான்கின் தொழில்களையும் அவற்றின் வேறாகிய ஒருவனாக இருந்து அறிந்து பின் அவற்றைத் தன்விருப்பப்படி அவ்வவ் விடயங்களிற் செலுத்தியும் தடுக்க வேண்டியவிடத்தில் செல்லவொட்டாது தடுத்தும் அவற்றின் தொழில்களைத் தான் ஏவிச் செய்விக்கின்றவனுமான உயிர் இவற்றிற்கு வேறானதாகும்.

இதனை இணைதரு மிவற்றின் வேறாயானெனதென்ப தான்மா எனச் சிவஞான சித்தியார் கூறும். மேலும் இதனைச் சாந்தோக்கிய உபநிடதம் இதை நான் நினைக்கின்றேன் என்று எவன் இந்திரிய விடயங்களையும் இந்திரியங்களுக்கெட்டாத விடயங்களையும் அறிகின்றானோ அவ்வறிவை ஏற்படுத்துவது உயிரே என்று கூறுவதையும் கருத்திற் கொள்ளல்வேண்டும். ஓருயிர் ஒரு விடயத்தை அறியும்பொழுது ஐம்பொறிகளிலொன்றும் பஞ்சபூதங்களிலொன்றும் அந்தக் கரணங்கள் நான்கும் கலாதிகள் ஐந்தும் ஆகிய 11 தத்துவங்களைப் பொருந்தி நின்று, அவற்றினுதவியால் அறியும். இந்த நியதிப்படியன்றி உயிர் ஒன்றையும் அறியமாட்டாது. உயிரில்லாமல் இத் தத்துவங்களும் இயங்கமாட்டா.

எனவே நாம் இதுவரை ஆராய்ந்ததிலிருந்து சடப்பொருளான உடற்கருவிகள் எதுவும், தம்மைத்தாமே அறியும் ஆற்றலற்றன என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. எனினும் ஐம்பொறிகள் வாயிலாக வரும் விடயங்களைப் பிரகிருதியிற் (சடப்பொருளிற்) தோன்றியதான புத்தி நிச்சயிக்கையில் உயிருக்கு அறிவை எழுப்பும் வித்தியாதத்துவம் வாயிலாக, அவ்வுயிர் செய்த புண்ணிய பாவங்களுக்கேற்ப விடயங்களை இது, அது எனத் தீர்மானிக்கும். இவ்வாறு உயிர் புத்தி முதலான கருவிகளின் துணைக்கொண்டு அறிவது ஆராய்ச்சி அறிவாகும். அனுபவ வாயிலாக உயிர் ஒன்றினை அறிவதே உயிர்தானே அறிவதாகும். எனவே இன்றைய விஞ்ஞான ஆய்வுகளிற் சடப்பொருளில் உருவாகியதான மூளையை மாற்றுச்செய்து அதாவது இரு குரங்குகளின் தலைகளையும், உடல்களையும் மாற்றிப் பொருத்திப் பார்த்தவிடத்துக் குரங்குகளின் நடவடிக்கைகள் வழமை போலிருந்தன என்று சொல்லுமிடத்து அவை புத்தியின் செயற்பாட்டினையே பிரதிபலிப்பனவாம். ஐம்பொறிகள் அந்தக் கரணங்களின் தொழிற்பாடுகள் யாவும் கழுத்தின் மேற்பாகத்து உறுப்புக்களின் தொழிற்பாடாம். எனவே துண்டமாக்கப்பட்ட உயிர்களின் வியாபகம் கழுத்தின் மேற்பரப்புவரை ஒடுக்கப்பட்டுவிட்டதாம். மற்று மூளை பாதிக்கப்பட்டுப் பல ஆண்டுகளாக மயக்க நிலையில் இருக்கின்றவரின் மூளைக்கு விஞ்ஞானிகள் பரிகாரம் தேடுவதன் மூலம் பழுதடைந்த அறிவுக் கருவிகளை திரும்பவும் இயங்கச் செய்யலாம். ஆனால் மயக்க நிலையிலுள்ளவரின் உட்கருவிகளான பிராணன் முதலானவை தொழிற்படுவதனால் மூளைதான் உயிரென்றோ அல்லது மூளையின் மேற்பரப்பிற்றான் ஒருவரின் உயிர் கலந்திருக்கிறது என்பதோ தவறாகும். எனவே இன்றைய விஞ்ஞானிகள் உயிர் ஓரிடத்திலேதான் (மூளையில் மாத்திரம்தான்) இருக்குமெனில் அது உருவமுள்ள பொருளாய் அழிந்துவிடக் கூடியதாகும். இதனைச் சிவஞான சித்தியார்

உடலிளி லேக தேசியுயிரெனி னுரவாய் மாயும்

என்று எடுத்துரைக்கும். மற்று உயிர் ஆகாயம் போல் எங்கும் வியாபித்து நில்லாமல் ஒரு தத்துவத்தைப் பொருந்தினால் அதிலே வியாபித்து அறியத்தக்க முறைமினையுடைத்தாகி மற்றுத் தான் வசிக்கின்ற உடலெல்லாம் வியாபிக்கத்தக்கவனாய் உருவமற்றவனாய் என்றுமுள்ளதாய் ஆணவமல சம்பந்தமுடையதாய் இருப்பதே உயிர் எனச் சைவசித்தாந்தம் கூறும். அதனாலன்றோ உயிரைச் சைவ சித்தாந்தம் வசித்திட வரும் வியாபி எனக்கூறும். எனவே வைத்தியர்கள் இறைவன் ஆணையாற் கூட்டப்பட்ட ஓருடலின் இயக்க நியதிகளின் நெறி நின்று சத்திர சிகிச்சைகளைச் செய்கின்றபொழுதே அவ்வுடல் உயிரின் வாழ்க்கைக்கேற்றதாக அமைகின்றது. அன்றேல் உயிரை வேறுடலுடன் இறைவன் கூட்டிவைப்பன். எனவே இவ்வுடலுக்கு வேறாகியதும் உடல் தோன்றிய காலம் முதலே அதனுடன் உடனிருந்து கொண்டு அவ்வுடற் கருவிகளின் துணைக்கொண்டு மறந்து மறந்து அறியும் ஆற்றலுடைய அறிவுப்பொருளே உயிரென அறியப்படுகின்றது. ஆயினும் உயிர் உடலுடன் கூடியியங்கும்பொழுது ஒவ்வொரு விடயத்தை ஒவ்வொரு பொறியுடனும் அதுவாக அழுந்தி அறிவதனாலும் பின் அவ்வாறு அறிந்த விடயஞானங்களை மறத்தலாலும் பின் இன்னொருவர் அறிவிக்க அறிதலாலும் மற்று இவ்வாறு அறிகின்ற தன்னையும் முழுமையாக அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளமுடியாதிருப்பதாலும் உயிர் தானாக எதனையும் அறியும் சக்தியற்றது என்பது தெளிவாம். உயிரை உடலுடன் கூட்டிய இறைவனே அதன் வினைப்பயன் வழி நின்று செலுத்தி ஒன்றாய், உடனாய் வேறாய் நின்று அறிவுறுத்துவான்

இவர்கள் இருவரும் யார்?



# அன்பே ஆலயம்

தேவதேவனான மகாதேவனே வான் ஒலி வாக்கால் கூறிவிட்ட அந்த மற்றொரு சிவாலயம் இது. இது மண்ணில் எங்குமே கட்டப்பட்ட ஒன்றல்ல. கல்லாலும் மண்ணாலும் பொன்னாலும் அந்த ஆலயம் உருவாக்கப்படவேயில்லை. ஓ! அந்த மகிமை பொருந்திய தேவாலயம் பிறகு எப்படித்தான் கட்டப்பட்டது என்று தானே கேட்கின்றீர்கள்?



அது ஓர் ஏழை பக்தன் தன் இதயத்திற்குள்ளேயே எழுப்பிய கனவாலயம். கல்லால் எழுப்பப்பட்ட ஆலயத்தைவிட அந்தக் கனவாலயத்தில் எழுந்தருளவே முதன்மை தந்தான் ஈசன்.

மாமன்னன் ராஜராஜனது கனவிலே இறைவன் எழுந்தருளி உரையாடினார்.

மகேஸ்வரா! மாமேரு பர்வதத்துக்கு இணையான திருக்கோயிலை உமக்குச் சமைத்துவிட்டேன் திருப்திதானே? என்று பணிவு சிறக்க வினவினான் ராஜராஜன்.

திருப்திக்கென்ன குறைச்சல் ராஜராஜா அந்த ஏழைக்கிழவியின் கனிவு சுரக்கும் கல் நிழலிலே கம்பீரமாக என்னைக் கொலுவிருக்க வைத்துவிட்டாயே நீ திருப்தி இல்லாமற்போகுமா? என்றார் ஈசன்.

என்ன..! ஈசன் இளைப்பாறுவது ஓர் கிழவி அளித்த கல்லின் நிழலிலா? மாபெரும் கற்கோவிலை உருவாக்கியது நாம். ஆனால் ஈசன் எவளோ ஒரு கிழவியை அல்லவா புகழுகின்றார்.. துடித்துப் போனான் மன்னன்.

உடனே சிற்பிகளை அழைத்து நடந்ததை விசாரித்து உண்மையை அறிந்து கொண்டான்.

ஓர் ஏழைக்கிழவி கற்களை உளிகளால் பொளிந்து கவின்மிகு சிற்பங்கள் வடித்துக் கொண்டிருந்த சிற்பிகளின் தாகத்துக்கு நீர் வார்த்தாள். நீருடன் மோரும் கலந்து குளிர்ச்சியூட்டினாள். இலவச சேவை..இணையற்ற திருத்தொண்டு. கனிவு சிறக்க, கருணை சுரக்க ஓர் அன்னையின் பரிவுடன் உலவி உதவிய அவள் அத்தனை சிற்பிகளின் நெஞ்சிலும் உருவமாய்ப் பதிந்துபோனாள்.

திருப்பணி முடிகிறவேளை, கோபுர உச்சியில் பதிக்கவேண்டிய பிரமரந்திரக்கல் எதுவும் பொருத்தமாக அகப்படவில்லை. கிழவி சொன்னாள் என் பங்குக்கு இந்த ஆலயத்தில் ஒரு கல்லாவது சேர்க்க விருப்பம் குடிசை வாசலில் உள்ள வாசற்படி ஒன்றுதான் உள்ளது. அதை எடுத்துக் கொள்ள இயலுமா?



சிற்பிகள் அந்தக் கல்லைப் பார்த்தனர். அட! என்னவொரு அற்புதம்.. அந்த ஒருகல்தான் பிரம்மரந்திரக்கல்லாகப் பதிக்கப் பொருத்தமாக இருந்தது. கோபுர உச்சியில் அதைப் பதித்துவிட்டார்கள்.

ராஜ ராஜ சோழனுக்கு இப்போது உண்மை புரிந்தது.

உடனே அவன் பட்டத்து யானையை அனுப்பி அதில் அந்தக் கிழவியை ஏற்றி வரப் பணித்தான். ஏன்?..

அவளைத் தரிசிக்க, அவள் பாதங்களை வணங்கத்தான்.

இறைவனே கூறிவிட்டாரே அந்த ஏழைக் கிழவி அளித்த கல்லின் நிழலில் இளைப்பாறுவதாக அந்த மூதாட்டியை வணங்குவதைவிட வேறென்ன பாக்கியம் இருக்க முடியும்.

அன்புதான் சாஸ்வதம
அன்புதான் சகல வேதங்களின் சாரமும்
அன்புதான் திருத் தொண்டு
அன்பு செய்யுங்கள் மானிடரே
அரன் அருள் பூரணமாகக் கிடைக்கும்
இதில் ஐயம் ஒன்றுமெயில்லை.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயமாம்
வள்ளல் பிரானார்க்கு வாய்க் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணி விளக்கே
– திருமந்திரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குள் நான்

தனித்தமிழ் என்றும் திராவிடம் என்றும் நாஸ்திகம் என்றும் பல கூவல்கள் தமிழுலகில் எழுந்துள் ளன. இன்றும் ஒலி தந்து கொண்டிருக்கின்றன. பிறநாட்டுப் பிறமொழி இலக்கியங்களிற் பாண்டித்தியம் பெறாதவர்கள் கல்லாதவர்கள் என்றும் பட்டிக்காடுகள் என்றும் பாடம் சொல்லப்பட்டுவருகின்றது தமிழ்ப் பல் கலைக்கழகங்களில்.

இந்தப் பார்வையில் என் போன்றவர்கள் படிப்பறிவற் றவர்களாகவும் பட்டிக்காடுகளாகவும் மொழி கலை பண்பாட்டு வெறியர்களாகவும் பார்க்கப்படுவார்கள் என் பதிலும் எனக்கு எதுவித ஐயப்பாடோ சந்தேகமோ இல்லை.

என்போன்றவர்கள் எழுதுவது கவிதைகளாகமாட்டாது. காட்டுக் கூச்சலாகவே பார்க்கப்படும் என்பதும் எனக் குத் தெரியாமலில்லை.

நாளாந்தமாக உபயோகத்தில் இருந்து அருகி வருகின்ற தமிழ்ச் சொற்களைக் கூட்டி வார்த் தைகளை நறுக்கி ஆங்கிலத்தையும் அங்கிங் கெனாதபடி கலந்து கூட்டி எழுதும் கலை இன்று அமோக வரவேற்பைத் தமிழகத்திற் பெற்று வருகின் றது. புதுக்கவிதை என்றும் மரபுக் கவிதை என் றும் இரண்டுபட்ட கவிதை மரபுகள் இருப்பதாகக் கற்பனை செய்யப்பட்டு வருகிறது. கவிதையென்றாலே அது மரபுவழிவந்த ஓர் இலக்கியம் என்பதே எனது தாழ்மையான கருத்தாகும்.

மரபுவழிச் சிந்தனையையும் மரபு வரையறைகளையும் தலையிற் தூக்கி வைத்துக் கொண்டு தாமே தமிழின் தாதாக்கள் எனக் கூறுவோர் அணியில் நிற்பவனல்ல நான்.

என்னால் பழையன கழிதலையும் புதியன புகுதலையும் புரிந்து கொண்டு இந்தப் பரிணாம வளர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ளவும் முடியும். இருப்பினும் மரபினை உடைக்கிறோம் புதுமையைப் புடமிடுகின்றோம் என் பவர்களின் கையிருப்புகளையும் அவர்களது கையாலாகாத தன்மைகளையும் புறக்கணித்துவிட்டு அவர்களைக் கைகுலுக்கி வரவேற்று அவர்களைப் போலியாக வாழ்த்தத்தான் என்னால் முடியாமல் இருக் கின்றது.

இவர்களிற் பலர் தாளிற் பேனாவை வைக்கும்போதே எந்தப் பத்திரிகையில் வெளிவரப்போகிறது? எந்த அச் சகத்தில் நூலாக்கப்படப்போகிறது? என்ற எண்ணக் கருக்களோடுதான் தமது எழுத்துக்களை ஆரம்பிக் கிறார்களோ என்ற ஐயம் அடிக்கடி எழுவதுண்டு. கவிதை என்பது ஒரு மரபுச் சொல்லாகவே எனக்குப் படுகின்றது. கவித்துவம் என்பதுவும் ஒரு மரபுத் துவமாகவே படுகின்றது. கவிஞன் என்பவனையும் எழுத்தாளன் எனபவனையும் என்னால் வேறுவேறு நிலைகளில் இனங்காணமுடிகின்றது. ஒரு கதாசிரியன் நாவலாசிரியன் நாடகாசிரியன் என்ற படைப் பாளிகளையும் கவிஞன் எனபவனையும் பிரித்து இனங்



திருவருள் ஒன்றில் வெளிவந்த இக் கட்டுரைக்கு பல வாசகர்களிடமிருந்து பாராட்டுக்கள் கிடைத்துள்ளன. இக் கட்டுரை ஒரு வகையில் வரலாற்று விமர்சனமே. வரலாறு என்பது வெறுமனே சம்பவங்களின் கோர் வையல்ல. சம்பவங்களின் பிரதிபலிப்பும் வரலாறாகலாம் என்பதற்கு இக்கட் டுரை ஒரு உதாரணமாகும். இது சம்பந்தமான காத்திரமான அபிப்பிராயங் களை மேலும் எதிர் பார்க்கின்றோம்.
ஆசிரியர்

புலவர் சிவநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணமுடிகின்றது.

நான் ஒரு கவிஞனின் கவிதைகளைப் படிப்பதைவிட அவனைத்தான் முழுமையாக ரசிக்கிறேன். கவிஞன்தான் என்னை ஈர்க்கின்றான்! இயக்குகின்றான். அவனது கவிதைகள் அவனுக்கும் எனக்கும் இடையிலுள்ள ஊடகமே ஒழிய கவிஞனைவிட்டுப் பிரிந்துநிற்கும் அவனது கவிதை வரிகள் என்னுள் எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்துவதாக இல்லை. கவிதையினூடு அந்தக் கவிதையின் மூலகர்தாவை நோக்கியே எனது ஆத்மாவின் அலைகள் பாய்கின்றன.

இன்றைய உலகில் அதுவும் தமிழுலகில் ஆத்மா இல்லாதவர்கள் வரிகளைக் கொட்டுகின்றார்கள். அண்மையில் நமது மண்சார்ந்த ஒரு கவிதைப் புத்தகத்தைப் படித்தேன். இக் கவிதைகளிற் பல கொழும்பிலுள்ள உயர்தர தங்குமாடங்களில் சிங்கள அரசியல்வாதிகளோடு கைகுலுக்கி கட்டியணைத்துக் குலவும் பண்பும் வாழ்க்கை நிலையும் உள்ளவர்களாக இருப்பார்களென்பது எனது எண்ணம். ஆனால் தமிழினத்தின் அவலங்களைத் தமிழினத்தின் மீதான சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைகளையும் இவர்களின் வரிகளிற் பார்க்கமுடிகின்றது.

இவர்கள் சிங்கள ஏகாதிபத்தியத்தினை எதிர்ப்பதாகவும் அதே வேளை தமது சொந்த வாழ்வுக்கான அடித்தளங்களை அதே ஏகாதிபத்தியவாதிகளின் அனுசரணைகளோடும் ஆதரவோடும்தான் நடத்திவருவார்களென்பது எனது எண்ணம். இருந்தாலும் பொதுமை நிலையிற்றான் இவர்கள் சிங்கள பௌத்தமத வெற்றியினையும் சிங்கள இராணுவத்தின் அராஜகங்களையும் தாக்குகிறார்களேயொழிய தெரிந்தும் தெரியாமல் இவர்களால் ஒருசில தனிப்பட்டவர்களைத் தாக்கி எழுத முடியாது. காரணம் இத்தனிப்பட்டவர்கள் இவர்களது உல்லாச வாழ்க்கைக்கு உரம்போடுபவர்கள். முன் பொருதரம் சாகித்திய மண்டலத்திற்குச் சலாம் போட்ட வரலாறு ஒன்று நம்முள் இருந்ததை நம்முள் பலர் அறிவோம்.

தமிழகத்திலிருந்து எழுத்துக்கள் படைப்புக்கள் இலங்கைக்கு வரக்கூடாது என்று சங்கூதிய காலத்தில் தாம் எழுதும் எதனையும் நமது மக்கள் ஏற்றுக் கொள்வார்களென்னும் பகற்கனவு கண்ட கூட்டம் சாகித்திய மண்டலத்தின் இராப்பிச்சைக்காக வரங்கேட்கலாமோ? சாகித்திய மண்டலவாதிகளான இவர்கள் ஒருசில தனிப்பட்டவர்களை எதிர்க்க மறுத்தவர்கள் அவர்களை மதித்தவர்கள்!

ஒரு கவிஞன் லாப நட்டக் கணக்குப் பார்ப்பவனல்ல. தமர், பிறர் என்று தராசிலிட்டுப் பார்த்து எழுதிப் பிழைப்பவனல்ல!.

ஒரு கவிதை பிறக்கும்போது எழுதிப் பிழைக்கும் நோக்கோடு பிறப்பதில்லை.

வெண்தாளை முன்னால் வைத்துக்கொண்டு சொல்லுக்கும் வார்த்தைக்கும் ஏங்கியபடி வானத்தைப் பார்த்திருக்கும் வரட்டுப்பேர் வழி கவிஞனாக முடியாது. கவிதை வெடித்து வருவது. சொற்கள் சீறிப் பாய்ந்து வருவன! இதற்குப் பின்னால் இது வர வேண்டுமெனக் கருத்தாய்வு செய்து அதன் பின்னால் முடிவெடுத்துச் சொற்களைத் தள்ளுபவன் கவிஞனல்ல! தொடர்ந்து கொட்டுகிற மழைத்துளிபோல பாய்ந்து ஓடுகின்ற நதிப் பிரவாகம்போல சொற்கள் பீறிக் கொட்டவேண்டும்.

கவிதல் என்றால் கூடுதல். மேகங் கவிவதுபோல் எண்ணங்கள் வந்து தாமாகவே கவிகின்றன. அந்த எண்ணங்கள் உணர்வுகளை மோதுகின்றன. சிந்தனைமின்னல் பளிச்சிடுகின்றது. கவிதை பொழிகின்றது.

இந்த வரிக்குப் பிறகு இதுதான் வருமென்றோ இந்தக் கருத்தின்பின் இதுதான் வரவேண்டுமென்றோ குந்தியிருந்து புரட்டியடிக்கும் குப்பாடித்தனம் கவித்துவமாகாது. உயரிய எண்ணமும் உள்ளத்தின் தூய்மையும் உலகின் மேன்மையுமே ஒரு கவிஞனது களங்கள்.

## ஏகலைவன்

மகாபாரத காலத்தில் வாழ்ந்த வேடர் குலச் சிறுவன் ஏகலைவன். துரோணாச்சாரியாரிடம் வில் வித்தை கற்க விரும்பினான். அவன் குலத்தால் தாழ்ந்தவன் என்று துரோணர் அவனைக் குருகுலத்தில் சேர்க்க மறுத்து விட்டார். இருப்பினும் துரோணாச்சாரியர்போல ஒரு உருவத்தைச் செய்துகொண்டு அவரையே தன் மானசீகக் குருவாக நினைத்து ஆழ்ந்த குருபக்தியுடனும் தீவிர சிரத்தையுடனும் தானே வில்வித்தை பயின்று தேர்ச்சி பெற்றான் ஏகலைவன். ஒரு முறை வேட்டைக்குச் சென்ற ஏகலைவனும் அர்ச்சுனனும் ஒருவரையொருவர் எதிர்த்து அஸ்திரப் பிரயோகம் செய்ய தனக்கு சமமான வில்வித்தைத் திறனுடைய ஏகலைவனின் குரு யார் என்று அர்ச்சுனன் கேட்டான். ஏகலைவன் தன் குருவும் துரோணாச்சாரியார்தான் என்று கூறி அவருடைய உருவச் சிலையைக் காட்டினான். தனக்குச் சமமாக யாரும் இருக்கக் கூடாது என்று கருதிய அர்ச்சுனன் இதைப்பற்றி துரோணரிடம் தெரிவிக்க ஏகலைவன் தொடர்ந்து அஸ்திர பயிற்சி செய்ய முடியாதபடி அவன் கட்டை விரலை குரு காணிக்கையாக கேட்டார் துரோணாச்சாரியார். அவனும் தன் கட்டை விரலை அறுத்துக் குரு காணிக்கையாக செலுத்தி குருபக்திக்கு எடுத்துக்காட்டாக விளங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவை மு. தயாளன்

# முகம் தொலைந்த வாழ்வு!

மூக்கும் கண்ணும் வாயும்
நாக்கும் நாடியும் நாளமும்
தேக்குத் தோளும் தெள்ளுதமிழ் எழுதும் கைகளும்
வாக்கும் சொல்லும் ஊற்றெடுத்து வரும் வயிறும்
நோக்குடன் நடக்கும் நீண்டகால்களும்
பாசக்கயிற்றால்,
கோர்த்து உலகில் நடமாட ஈசன்
இணைத்த புதிய உருவம் மானிடமெய்யாகும்.
முகம்.. . . .
மானிட உடலின் ஒவ்வொரு அசைவும்
தேன்தமிழ் பேசும் தமிழனாயினும்
ஏன் எந்த மொழிபேசும் யாராயினும்
அசைவுகள் தந்த இலக்கணங்கள்
ஓசைகள் நிரம்பிய மந்திரங்கள்
ஆசைகள் நிரம்பிய அவலங்கள்
கூட்டாய்ச் சேர்ந்து அமைந்ததுவே முகமாகும்
முகம். . . .
மூக்கும் கண்ணும் வாயும் முகமல்ல
நோக்கும் பார்வையும் அசையும் திசையும்
வாக்கும் வளம்நிறைந்த வாழ்வும் ஆன்றோர்
தேக்கிய அற்புதக் கலைகளும் பழக்கவழக்கங்களும்
பார்க்கில் முகமென்று முன்சொல்வோம்
தொலைத்தது. . . .
முகத்தைத் தொலைத்தோமா? இல்லை
முகத்தைத் தொலைத்து வாழ்வைத் தொலைத்
தோமா?
அகத்தை மறைத்து அறத்தை மறந்து
முகத்தைத் தேடி முழு உலகும் அலைகின்றோமா?
ஏகமும் இறைவன் எல்லாம் அவனே
போகமும் அவனே பொருள்களும் அவனே
யாகமும் அவனே யாசிப்பவனும் அவனே. .
எல்லாம் அவனே என்றானபின்பு
தொலைத்தோம் தொலைத்தோம் தொலைத்தோமென்று
தொலைவதன் ரகசியம் புரியவில்லை புரியவில்லை
நிமிர்ந்த நடையும் நேரிய பார்வையும்
சொல்லும் செயலும் இணைந்த நடைமுறையும
கனிந்த மனமும் கனத்த நினைவுகளும்
குனித்த புருவமும் குமிழ்வாய்ச் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியும
ஜனித்த உலகில் தொலைத்த கொடுமையால்
மரணம் அணுகாத முகங்களோடு மனிதர்களாக
வாழ்வதும் ஒரு வாழ்வா?
தமிழைத் தொலைத்தோம் தரத்தைத் தொலைத்தோம
வீரத்தைத் தொலைத்தோம்
விடுதலை உணர்வைத் தொலைத்தோம்!
சாரம் அற்றுப்போய் சாத்திரம் பார்த்தோம்!
பேரம்பேசியே பெரியவர்களானோம்!
சோரம்போய்ச் சொந்தமிழந்தோம்!
காரகிற் பிளவையும் கனகமணிக் குன்றையும்
கடவுளர்களாக்கினோம்!
நேர்மை இழந்தோம்! பொய்யர்களானோம்!
எல்லாம் தொலைத்தோம்!
தொலைத்துத் தொலைத்து தொலைந்து போனோம்!
தொலைந்துபோன முகத்தை மறைத்து
அலைந்து அலைந்து முண்டங்களாய் வாழ்கின்றோம்!
நின்றது நடந்தது பார்த்தது பாராதது
வென்றது வெல்லாதது கொன்றது கொல்லாதது
எல்லாமே அவனென்றோம்- அட
தொலைந்தது எதுவென்று புரியாமல் நின்றோம்!
மானிடனே கேள்!
உன்னைத் தொலைத்தாய்
உன் உணர்வைத் தொலைத்தாய்
உன் சிந்தனையைத் தொலைத்தாய்
உண்மையைத் தொலைத்தாய்
பெண்மையைத் தொலைத்தாய்
அன்பே சிவமான சிவனையும் தொலைத்தாய்!
சிந்திக்க மறந்தாய்! அற்பனாய் மாறினாய்.
சுந்தரத் தமிழில் கவிபாட மறந்தாய்!
தொலைத்தவற்றை வடிவமாக்கிக் கடவுளாக்கினாய்!
கடவுளை வணங்குவதாகப் பாசாங்கு பண்ணினாய்!
கடவுளை வைத்தே தவறுகள் செய்தாய்!
தவறுகளை கடவுளின் பின்னால் மூடி மறைத்தாய்!
போதும் மனிதா போதும்
இனித் தொலைத்ததும் மறைத்ததும் போதும்
புதிதாகப் பல புண்ணியம் செய்வோம்
புதியவிதிகள் பலவற்றைச் செய்வோம்
எங்கும் எதிலும் நிஜத்தைக் காண்போம்
வாருங்கள் தோழர்களே! நாளை நமதே!
நமக்கென்று உலகம் நன்றாக விரியட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரம்பொருள் கரும்பொருளா?
# அல்லது
# கரும்பொருளாகிறது!

சுதுமலை கந்தையா இராஜமனோகரன்

*சைவ சமயத் தத்துவங்கள் எக்காலத்தும் விஞ்ஞானத் தத்துவங்களோடு உடன்பாடானதாகவே இருந்து வருகின்றன. விஞ்ஞானத்தால் எக்காலத்தும் எட்ட முடியாதது நாம் வாழும் அண்ட வெளி. இதனால் அதற்கு எல்லை உண்டோ இல்லையோ என்பதையும் நாம் அறியப் போவதில்லை. இதனைப் படைத்த பரம்பொருளுக்கே இது வெளிச்சம். எமக்கு இது என்றைக்கும் சிதம்பர இரகசியமே!*

*மனித இனம் என்றும் எதையும் துருவித்துருவி ஆராயும் இயல்பினது. அவ்வாறு ஆராய்வதன் மூலமே விஞ்ஞானமும் வளர்கின்றது – மெய்ஞ்ஞானமும் வளர்கின்றது. இன்றைய உச்சக்கட்ட ஆய்வுக்குரிய இடங்களில் முக்கியமானது அண்டவெளி. இதற்குச் செல்ல மனித இனம் கண்டுபிடிக்கும் கருவிகள் மாறுபட மாறுபடக் காட்சிகள் வேறுபடும். விஞ்ஞானிகள் ஊகிக்கும் பலவற்றிற்குச் சைவ சித்தாந்த விளக்கம் உண்டு. மணிவாசகர் திருப்பெருந்துறைக் குருந்த மர நீழலிலே கண்ட மெய்ஞ்ஞானக் காட்சியின் விஞ்ஞான வடிவமே, இன்று வானத்திலே விஞ்ஞானிகள் காண முயற்சிக்கும் படைப்பின் மூலம் ..... அபிராமிப் பட்டர் அன்னையாகக் கண்ட அருளுருவமே இன்று விஞ்ஞானிகள் தேடி அலையும் கரும்பொருள் ......*

## பிரபஞ்சத்தின் வயது

நாம் வாழும் இப்பிரபஞ்சத்தின் வயது நூற்றுத்தொண்ணூற்றைந்து கோடியே ஐந்நூற்றி எண்பத்தெண்ணாயிரத்து ஐயாயிரத்து நூற்று மூன்று (195இ588இ5103) ஆண்டுகள் என்பது சோதிடக்கணிப்பு, (1). அதாவது 1,956 மில்லியன் ஆண்டுகள். மிகப்பிந்திய விஞ்ஞானக்கணிப்பின்படி பார்த்தால் ஏறத்தாழ 1,500 மில்லியன் தொடக்கம் 2,000 மில்லியன் ஆண்டுகள் (2) ஆகும். தாம் அறியாத யாவும் பிற்போக்கானவை என்னும் கற்பனையில் வாழும் சிலராலே மிகவும் பிற்போக்கானதென வர்ணிக்கப்படும் சோதிடத்தின் கணிப்பும் எத்தனையோ விஞ்ஞானத் தரவுகளையெல்லாம் கணணிக்குள் இட்டுப் பெறப்பட்ட விஞ்ஞாகக் கணிப்பும் எவ்வளவு நெருக்கமாக உள்ளன என்பதை இங்கு கவனிக்கலாம். சோதிடக்கணிப்பின்படி நாடி, விநாடி வரை கணித்துக் கூறப்பட்டுள்ளது.

## கரும்பொருள்

அண்மைக்காலம் வரையிலே பிரபஞ்சம் எவ்வாறு தொடங்கியது என்பதற்கு விஞ்ஞானம் கூறிவந்த விளக்கம் பலராலும் நன்கு அறியப்பட்ட பாரிய வெடிப்புத் தத்துவம் (டீபை டீயபெ வாநழசல) ஆகும். இன்னும் அந்த விளக்கமே ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பினும் மிக அண்மைக்காலத்திலே அவர்கள் அவ்விளக்கத்திற்குப் புதிய திருத்திய விபரங்களை இணைத்துக் கூற முனைகின்றனர். விஞ்ஞானிகள் கூறும் புதிய விளக்கம்... பாரிய சக்தியை வெளியேற்றவல்ல வெடிப்பின்மூலம் உலகம் தோன்றியிருக்குமாயின் இவ்வளவு காலம்வரை இவ்வாறு நிலைத்து இயங்கி இருக்கவும் முடியாது. இனிமேலும் விஞ்ஞானம். ஊகிக்குமளவு காலம் இயங்கவும் முடியாது. எனவே,

1. பிரபஞ்சத்தின் எங்கோவொரு இடத்திலே பாரிய திணிவு ஒன்று ஒளிந்துள்ளது (அஐளளைபெ அயளள). (3). அத் திணிவு இப்போது எம் கட்புலனுக்குட்பட்ட நட்சத்திரங்கள் அனைத்தினது திணிவிலும் 10 மடங்காகவாவது இருக்கவேண்டும் என்பது அவர்கள் ஊகம். இவ்வூகத்திற்கான காரணம்... எங்கோ ஒளிந்துள்ளதாக ஐயப்படும் இந்தப் பொருள் இவ்வளவு திணிவிலே இருக்காது போனால், பாரிய வெடிப்பின் பின்னர் பிரபஞ்சம் இப்போதுள்ள ஒழுங்கான விரிவிலமைந்த வடிவத்தில் அமையாமல், மிக வேகமாக விரிவடைந்து மிக ஐதாகி எதுவுமே கோளமாக அமையாத நிலையிலே முற்றுப்பெற்றிருக்கும் என்னும் வாதம். இப்பொருள் இதுவரை விஞ்ஞானிகளாலே இதுதானெனச் சுட்டப்படவில்லை. காணமுடியாத பொருளாகவிருப்பதாலே கறுப்பான வான் வெளியிலே கறுப்பாகக் காட்சி தந்து– கட்புலனுக்காட்படாது– இருக்கின்றதெனவும் ஓர் ஐயம். அதனால் இதனைக் கரும்பொருள் (டிடயஉம அயவவநச) என்பர். இதனை அனுமானித்த விஞ்ஞானிகள்குழு இக்கரும் பொருளை இரவுபகலாகத்தேடி வருகின்றது. இவர்களில் ஒரு குழுவினர் நிலத்தைத் தோண்டி அதனுள்ளே கூடத் தேடி வருகின்றனர். ஒருவேளை பூமிக்குள்ளே அப்பொருளின் சிறு பங்கு இருக்குமோ எனவோர் ஐயம். இங்கிலாந்தின் வடக்குப்பகுதியிலுள்ள பழைய நிலக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிச் சுரங்கம் ஒன்றினுள்ளே மாதக்கணக்காக வசித்துக் கொண்டே தேடும் இன்னொரு குழுவும் உண்டு என்பதை இங்கு நினைவு கொள்ள வேண்டும்.

அல்லது,

2. குறிப்பிட்ட ஏதோவொரு அணுப்பொருள் ஏதோவொரு அதிர்வினாலே பெருகத் தொடங்கித் தொடர்ந்து பல யுகங்களாகப் பெருகி இன்று நாம் காணும் இப் பிரபஞ்சமாக விரிந்தள்ளது என்பதாகும்.

இந்தத் தத்துவத்தையே சைவசித்தாந்தம் ஆரம்பத்திலிருந்து கூறிவருகின்றது.

சைவசித்தாந்தத் தத்துவத்தைச் சற்று விரிவாகப் பார்த்தால்..
பிரபஞ்சம் என்ற இப்படைப்பு இல்லாத போது ஆகாயவெளியிலே தனித்து இருப்பவை மூன்று பொருட்கள்:

1. சிவம்: சிவம் இயக்கமின்றி மோனநிலையிலே இருக்கும். திருவருட்சக்தி சிவத்துள்ளே அடக்கமாகியிருக்கும்.

2. உயிர்கள்: உயிர்கள் யாவும் சாம்பலிலே இட்டுவைத்த விதைகள்போலே ஆண்டவனின் மறைத்தல் என்னும் தொழிலுக்காட்பட்டு இயக்கமற்றிருக்கும். ஒவ்வொரு ஆன்மாவினது ஆணவம், கன்மம் என்னும் மலங்கள் ஆன்மாவோடு இணைந்து உறையும்.

3. மாயையின் மூலக்கரு: ஐம்புலன்களாலும் அறியப்படும் இப்பாரிய பிரபஞ்சம் மாயை என்னும் சிறு அணுப் பொருளாக ஒடுக்கப்பட்டிருக்கும்.

**இந்த இடத்திலே பொருத்தமான சிறு விளக்கம் ஒன்று:**

மகோற்சவ காலத்திலே கோயிலின் முன்னாலுள்ள கொடிமரத்தின் அமைப்பு மேலே குறிப்பிட்ட முப்பொருள்களும் இணைந்த ஒன்று. கொடியேற்றம் படைத்தல் என்னும் தொழிலைக் குறிப்பது. கொடிமரம் ஆண்டவனையும் அதிலேற்றப்படும் துணியினாலான கொடி ஆன்மாவையும் அக்கொடியைச் சுற்றியுள்ள தருப்பைக்கயிறு மாயையையும் குறிப்பன. தருப்பைக் கயிறே கொடியை மேலே உயர்த்த உதவுவது. அதுபோலவே நாம் உலகவாழ்விலே மயங்கி அமிழ்ந்துவிடாமல் அதனைக் கருவியாகக் கொண்டு இறைவனைப் பற்றுக்கோடாக்கி உயர முயல வேண்டும் என்பதுவே தத்துவம். திருவிழாக்கள் காத்தலையும் தேர் அழித்தலையும் அன்றிரவு நடைபெறும் திருவிழா மறைத்தலையும் தீர்த்தம் அருளலையும் குறிப்பன. திருவிழாக்கள் தவிர்ந்த ஏனைய காலங்களிலே கொடிமரம் மட்டும் தனித்து நிற்கும். இது பிரபஞ்ச இயக்கம் இல்லாத நிலையைக் குறிப்பது. அப்போதுள்ள கொடிமரம் மோனத்தவமிருக்கும் சிவம்.

இன்னொரு வகையாகப் பார்த்தால் கொடிமரம் எமது முள்ளந்தண்டு. அடியிலுள்ள பிள்ளையார் குண்டலினி சக்தி. உடலென்னும் மாயையைக் கருவியாக்கி, சக்தி என்னும் கொடியை உயர்த்தினால், ஆன்மா உயர்ந்து செல்லும். உடம்பை வளர்த்து உயிர் வளர்த்தேனே என்ற திருமூலரின் வரி இதனையே உணர்த்தும்.

உலகத்தை மீண்டும் தொடக்க இறைவன் பேரருள் கொள்ளும்போது அவனிலிருந்து– அதாவது– சிவத்திலிருந்து திருவருட்சக்தி உதயமாகும். தொடர்ந்து நாதம் உருவாகும். ஓம் என்கின்ற அந்த ஓங்கார அதிர்வு தொடங்கியதும் மாயை பெருகத்தொடங்கும். அதிர்வும் தொடர்ந்து கொண்டே இருக்கும். மாயையின் பெருக்கமும் தொடரும். மாயையின் பெருக்கம் மட்டுமல்ல– இயக்கமும் அந்த ஓங்காரத்தின் அதிர்விலேயே தங்கியுள்ளது. அதனாலேயே மனவொடுக்கத்திலே ஈடுபட்டுக் குண்டலினி சக்தியை எழுப்பும் ஞானிகளினால் இவ்வோங்கார நாதத்தைக் காதுகளினாலே கேட்க முடியும். வானொலியைச் சரியான அலைவரிசையிலே நிறுத்துவது போல ஆன்மா மனத்தைச் சரியாகப் பயன்படுத்துவதே தேவையான செயல்.

## கறுப்பு அல்லது நீலம்

ஆண்டவன் என்றும்– பரம்பொருள் என்றும்– ஒருநாமம் ஒருருவம் ஒன்றும் இல்லாத கடவுளுக்கு– நாம் ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டுகின்றோம். அதனினும் கூடிய உருவங்களைக் கொடுத்திருக்கின்றோம். சரியோ பிழையோ இன்னும் கொடுத்துக் கொண்டும் இருக்கின்றோம். இந்த உருவங்கள் யாவற்றையும் எடுத்து நோக்கினால் அதிகமான கடவுளர் உருவங்கள் சிவந்த நிறமுடையவை. சில கடவுளர் உருவங்கள் நீலநிறமுடையவை. குறிப்பிட்ட சில கடவுளர் உருவங்கள் மட்டும் இரண்டு நிறத்திலும் காணப்படுபவை. இவ்வாறு இரண்டு நிறத்திலும் காணப்படகின்றவை மிக முக்கியமான கடவுளரின் உருவங்கள். பவள மால் வரையைப் பனிபடர்ந்தனையதோர் படரொளிதருநீறும் என்று திருவிசைப்பாவிலும் துணியணி செம்மணித்தூணம் நீறுதோய் வனிதையோர் கூறினன் வடிவு காட்டின என்று கம்பராமாயணத்திலும் இவை தவிர்ந்த வேறு பல இடங்களிலும் சிவந்த மேனியனாக வருணிக்கப்படும் சிவன் கூடச் சில வேளைகளிலே நீல மேனியனாகக் காட்டப்படுகின்றான். பவளக்கொடி எனவும் மாதுளம் பூ நிறத்தாள் எனவும் அபிராமிப்பட்டருடைய வருணனைக்குட்பட்ட எம்பெருமாட்டி உமையவள் சிவந்த மேனியளாகவிருப்பினும் பல இடங்களிலே நீலமேனியளாகவே சித்தரிக்கப்படுகின்றாள். இவர்களின் மூத்த மகனாகக் கருதப்படும் பிள்ளையாரை நோக்கின்... பிள்ளையார் மூலம் இறுதிவரை முழு அருளையும் பெற்ற ஔவையார்கூடத் தனது மூதுரையிலே துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம் என பவளநிறத்தவனாக வருணிக்கின்றார். தனது இறுதி முயற்சியான விநாயகர் அகவலிலே நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும் எனப் பாடுகின்றார். இதை விடத் திருமால் அல்லது கண்ணன் நீலநிறம் மட்டும் உடையவன். மொத்தத்திலே சிவன், சிவகாமி, விநாயகன் என்போர் நீல நிறத்திலும் காட்சி தருபவர்கள். இளையோனாகிய முருகவேளுக்குக்கூட அந்நிறம் இல்லை. நீலம் என்று அவர்கள் குறிப்பிடுவது கறுப்பையே என்பதை இலக்கியவாயிலாக நாம் அறிவோம்.

இப்பிரபஞ்சம் இத்தனை கோடி ஆண்டுகள் இயங்கிக்கொண்டு இருப்பதற்கும் இன்னும் பல்லாயிரமாண்டு இயங்குவதற்கும் பாரிய திணிவுள்ள கரும்பொருளொன்றின் துணை தேவைப்படுகின்றதென்று விஞ்ஞான மூளை கூறும்போது, திருவருட்சக்தி அன்னை கருமாரியின் நினைவு மெய்ஞ்ஞான மூளையிலே வரவில்லையா! சடப்பொருளும் சக்தியும் ஒருபொருளின் இரு வடிவங்கள் என இருபதாம் நூற்றாண்டிலே முதன்முதலாக ஐன்ஸ்ரீன் என்ற விஞ்ஞானி குறிப்பிட்டார். திருவருட்சக்தி, திரோதான சக்தி, நாம் காணும் சடப்பொருள்கள் இன்னோரன்ன எல்லாமே எம்பெருமாட்டியின் வடிவம் என்கின்றது சைவசித்தாந்தம். சர்வம் சக்தி மயம்!!

## கருந்துளைகள் (Black Holes)

அளவிலே சிறியவை. ஆனால் அடர்த்தியிலே அதி கூடியவை. சாதாரண பௌதிகவியலுக்குரிய தன்மையிலிருந்து வேறுபடுமளவிற்கு அதி கூடியவை. அது மட்டுமல்ல தமது ஈர்ப்பு எல்லைக்குள்ளே அகப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய நட்சத்திரங்களை எல்லாம் உறிஞ்சிவிடவல்லன. விஞ்ஞானிகள் மலைக்கின்ற அளவிற்கு நிகழ்வுகளை நிகழ்த்துவன. எமது சூரியனைப்போல் ஆயிரம் மடங்கு பெரிய நட்சத்திரங்களையெல்லாம் ஒரு மூச்சிலே உறிஞ்சிவிடுவன. சாதாரணப் பார்வைக்கு ஆனையைப் பூனை விழுங்குவதற்கு ஒப்பாக இந்நிகழ்வு அமையும். இவ்வளவற்றிற்கும் இவற்றின் அளவோ சிறு கடலையின் அளவுதான் என்கின்றனர் விஞ்ஞானிகள். ஆனால் திணிவு அசாதாரணமான அளவில் உயர்ந்துள்ளதால்– அடர்த்தியும் கூட. அதனால் ஈர்ப்பும் கூட. வரலாற்றுக்கு முந்திய பழைமை மிக்க சைவசித்தாந்த சாரமாக விளங்கும் இலகு வடிவங்களிலே தலையாயது மாணிக்கவாசகரின் திருவாசகம். இத்திருவாசகத்தின் சிகரம் சிவபுராணம்.

*நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க* என ஆரம்பிக்கும் 95 வரிகள் கொண்ட சிவபுராணத்திலே ஒன்பது இடங்களிலே இறைவனை ஒளிவடிவானவனாக வர்ணிக்கின்றார் மணிவாசகர்.

*மிக்காய் விளங்கொளியாய், மிளிர்கின்ற மெய்ச் சுடரே, மாசற்ற சோதி, மலர்ந்த மலர்ச் சுடரே, தேசனே, ஒளிக்கும் ஒளியானே, சோதியனே, காண்பரிய பேரொளியே, தோற்றச் சுடரொளியாய்* என்பவையே அவை. ஒன்பது இடங்களிலே ஒளியென்றவர் ஒரேயொரு இடத்தில் ஒளியென்ற உடனேயே இருள் என்கின்றார்.

*சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே*
*ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே*
*ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே*
*கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்...*

என்ற வரிகள் சைவமக்கள் அனைவரும் அறிந்தவை. மேலும், இறைவனுக்கு மணநாளென்று, இளைய கன்னியர் கூடிச் சுண்ணமிடிக்கும் போதான பாடல்கள் (இன்று மரணநிகழ்விற்கென யாவராலும் ஆலய மகோற்சவக் கிரியைகளின் போது மட்டுமென்று சிலராலும் அறியப்பட்டவை என்பதையும் இங்கு கூறல் அவசியம்) எனப் பாடப்பெற்ற திருப்பொற்சுண்ணத்தின் இறுதிப்பாடல்:

*வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு*
*மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்*
*சோதியும் ஆய் இருள் ஆயினார்க்குத்*
*துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்*
*பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப்*
*பந்தமுமாய் வீடும் ஆயினார்க்கு*
*ஆதியுமாய் அந்தம் ஆயினார்க்கு*
*ஆடப்பொற்சுண்ணம் இடித்து நாமே.*

இவ்வாறு பல இடங்களிலே அருளாளர்கள் இறையுணர்வை இரண்டு எல்லைகளிலும் வருணித்துள்ளார்கள். மூளையைப் பயன்படுத்தாது நோக்கின் இவை முரண்பாடுகளாக மட்டுமே காட்சி தரும். அணுவிற்கணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய் விளங்கும் இறைவனை ஓரளவு சிந்தித்தால் இம் முரண்பாடுகளின் இணைப்பை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு கூறுவதை வாசிக்கும் சிலர், இவை வழமையான வசனங்கள் தானே என்பர். ஆனால், மெய்ஞ்ஞான உலகிலே மட்டுமன்றி, விஞ்ஞான உலகிலும் முரண்பாடுகள் உள்ளன. விஞ்ஞானிகள் அவற்றை இணைப்பதிலே வெற்றி கண்டுள்ளனர்.

## சோதியனே

நாளும் நமக்கு ஒளிதரும் ஆதவனை நாம் எப்போதாவது காலை அல்லது மாலை வேளைகளிலேதான் கண்களாற் பார்ப்பதுண்டு. மற்றும் நேரங்களிலே பார்க்கமுடியாதளவு ஒளி. ஒரு சூரியனே இவ்வாறு எனின் இறைவனை எவ்வாறு நாம் காணமுடியும் என்பது நியாயமான கேள்வியே. ஏனெனில், புராண இலக்கியங்களிலே இறைவனின் திருமேனியை ஆயிரங்கோடி சூரியப் பிரகாசமுள்ளது எனவே குறிப்பிடுவர்.

கருந்துளைகள் இருக்கின்றனவே அவையும் இவ்வாறு ஒளி பொருந்தியவையே. அப்போ ஏன் அவற்றைக் கருந்துளைகள் என்கின்றார்கள்?

## துன்னிருளே

வெறுமனே இருள் என்றால் இருள் மட்டுந்தான். துன்னிருள் என்றால்– கும்மிருட்டு என்பார்களே– மிகுந்த இருள். ஆயிரங்கோடி சூரியப்பிரகாசமான இறைவன் உடனடியாவே இருளாகவும் காட்சி தருகின்றான்.

நமது சூரியனைப்போல் பன்மடங்கு ஒளிபொருந்திய கருந்துளைகள் அவற்றின் அதிகூடிய ஈர்ப்பின் காரணத்தால் ஒளியையே உறிஞ்சிவிடுவன. இதனாலே தமது ஒளியைத் தாமே உறிஞ்சிக் கறுப்பாகக் காட்சியளிக்கின்றன. அல்ல... காட்சியிலிருந்து ஒளிந்து கொள்கின்றன.

## தோன்றாப் பெருமையனே

*பார்த்தலா அல்லது உணர்தலா*

இறைவனைக் கண்ணாரக் கண்டுதான் அருளாளர்கள் பாடினார்கள் என்பது ஒரு வாதம். இறைவனைக் காணமுடியாது. அவனை உணரத்தான் முடியும் என்பது இன்னொரு வாதம். இவ்விரண்டிற்குமே உடந்தையாகக்

*கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்*

என்றும் பாடி வைத்தனர். சிவபுராண வரிகளிலேயே, *தோன்றாப் பெருமையனே* என்றுதானே பாடி வைத்துள்ளார்.

மூன்றே வயதான திருஞானசம்பந்தர்,

*தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண் மதி சூடி*
*காடுடைய சுடலைப்பொடி பூசி ...*

என வருணிக்க அவர் காலத்தில் வாழ்ந்த வயோதிப அடியவரான திருநாவுக்கரசர்,

..............

*யாதும் சுவடுபடாமல் ஐயாறடைகின்ற போது*
*காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்*
*கண்டேனவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.*

என்கின்றார். ஆயினும் வைதிக சமய அடியவர்கள் குறிப்பாகச் சைவ சமய அருளாளர்கள் இறைவனை அங்கம் அங்கமாகக் கண்டு அனுபவித்தே பாடியுள்ளனர் என்பதற்கு வரிக்குவரி அவர்கள் பாடல்களிலே உதாரணம் காட்டலாம்.

அருளாளர்கள் கூறிய யாவற்றையும் ஒருங்கிணைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தால் பின்வரும் முடிவினை எடுக்கலாம்.

ஆயிரங்கோடி சூரியப்பிரகாசமுள்ள ஒன்றையும் கண்ணாலே பார்க்க முடியாது. கறுப்பான பின்னணியிலே கறுப்பான ஒன்றையும் பார்க்க முடியாது. சாதாரணமாக ஒளிகூடினால் நேரே பார்க்க முடியாதுதான். ஆனால் ஒளி முன்னால் இருக்கிறதென்பதை இமைகளினூடுகூடவே அறியலாம். இல்லையா? ஆனால் கறுப்பான பின்னணியிலே உள்ள கறுப்பை எப்படி அறிவது!
இவ்வகைச் சிரமத்தின் காரணமாகவும் தான் கருந்துளைகள் மிக அண்மைக்காலத்திலேயே அறியப்பட்டன. அவற்றிலிருந்து புறப்படும் ஈர்ப்பையும் அவை நட்சத்திரங்களை உறிஞ்சுகையிலே ஏற்படும் கதிரியக்கத்தன்மையையும் படம்பிடித்தே அவை இருப்பதை விண்வெளி ஆய்வாளர்கள் அறிந்தனர். இவற்றைவிட இக் கருந்துளைகள் நட்சத்திரங்களை உறிஞ்சுகையிலே மட்டும் கட்புலனுக்காட்படும் சூழல் அமைகின்றது. பயங்கர சுழற்காற்றை நாம் கண்களாற் காணமுடியாது. ஆயினும் தன்வழியிலகப்படும் பொருட்களைத் தன்பால் ஈர்த்துச் சுழற்றும்போது சுழற்காற்றின் உருவத்தை நாம் அறிகின்றோம். அது போலவே கருந்துளைகள் தம் செயலில் ஈடுபடும்போது கட்புலனுக்காட்படுகின்றன.

அவ்வாறே இறைவனின் அருள் பதியும்போது அவன் இருக்கின்றான் என்பதை உணரமுடிகின்றது. இறைவனைப் படம்பிடிக்கும் கருவி எமது மனமே. மனம் செம்மையாக ஆகப் பட்டும் நன்றாக அமையும். இதனாலேயே,

*மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்*

என்றனர் எம் முன்னோர்.

ஆதியனே

இறைவன் மட்டுமே படைப்பின் தொடக்கத்திலே இருந்தான் என்பதை முன்னர் பார்த்தோம். யாவற்றையும் படைப்பவன் தானே படைப்புக்கு முதலிலே இருந்திருக்கவேண்டும். படைக்கும்போது நான்முகனாகவும் காக்கும்போது திருமாலாகவும் அழிக்கும்போது உருத்திரனாகவும் மறைக்கும்போது மகேசுவரனாகவும் அருளும்போது சதாசிவனாகவும் இவை அனைத்தையும் இயக்க நடனமாடும் நடராஜனாகவும் இறைவன் அமைகின்றான்.

நட்சத்திரமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்து ஏதோ காரணத்தாலே வெடித்து- ஆனால் வெளியே சிதறாமல்- உள்நோக்கிச் சுருங்கி- உள்நோக்கிச் சுருங்குவதால் திணிவு மிகவும் கூடி- ஒளியை உறிஞ்சுமளவிற்குக் கூடி- ஈற்றிலே கருந்துளை ஆகின்றது என்பதுவே விஞ்ஞான உண்மை. இவ்வாறான கருந்துளைகள் பிரபஞ்சத்தின் ஆரம்பத்திலேயே இருந்துள்ளன என்பது ஒரு ஊகம்.

அந்தம்

ஊழிக்காலத்தின்போது இறைவன் பிரபஞ்சம் முழுவதையும் அழித்து மாயையை ஒடுக்கி ஆன்மாக்களை உறக்கத்தில்வைத்துத் தான் மட்டும் நிற்பான். அதனால் அந்தம் எனப்படுகின்றான்.

கருந்துளைகள் வழியிலகப்படும் யாவற்றையும் உறிஞ்சி இறுதியிலே தாம்மட்டும் எஞ்சி நிற்கும் என்பதுவே விஞ்ஞானிகளின் கூற்று. எதுவுமே இவற்றுக்கு அகப்படாமல் இருக்கமுடியாது. எனவே இப் பிரபஞ்சத்தின் முடிவு கருந்துளைகளின் இயக்கமே என்றும் நம்புகின்றனர். யாவற்றையும் விழுங்கிவிட்டுத் தான் மட்டும் எஞ்சிநிற்கும்.

நடுவுஆகி ...

தொடக்கமும் முடிவுமான இறைவன் இடையிலே இல்லாமலா போகின்றான். அவன் கருணையே அனைத்தும் என்பதை நன்றாக வாழும்போது பலரும் உணருவதில்லை. எனினும் கல்லினுட் தேரைக்கும் கருப்பையுள் உயிருக்கும் வாழ வழி சமைத்தவன் அவன்தானே. நாம் காணும் எல்லாப் பொருள்களிலும் பாலிலே நெய்போலக் கலந்து- ஆனால் வெளிப்படாமல் இருப்பவனல்லவா அவன்.

நாம் வாழும் பால்வழியில் (ஆடைமல றுயல) மட்டும் ஆயிரம் வரையிலான கருந்துளைகள் உள்ளன. பிரபஞ்சம் தொடங்க முன்னரும் அது அழிந்த பின்னரும் இரண்டிற்கும் இடையிலும் என நிலைத்தவை கருந்துளைகள். மாயையை, மாயை என்னும் சொல்லின் கருத்திற்கு ஏற்பக் கணத்திற்குக் கணம் மாற்றிக் கொண்டிருப்பதே கருந்துளைகள் தாமே.

அல்லானே

ஆதியும் அந்தமும் நடுவுமான இறைவன் இவை ஒன்றுமாகாமல் யாவற்றையும் கடந்து நிற்பான். எல்லாப் பொருள்களுமாகி எங்கும் நிறைந்த அவன் ஒன்றுமாகாமல்- தனித்து- நிற்பான்.

நட்சத்திரங்கள் யாவற்றையும் விழுங்கியும் தாம் நட்சத்திரமாகாமல் என்றும் கருந்துளைகளாவே இவை இருந்துவிடுகின்றன. கருந்துளைகள் வழியிலகப்படும் யாவற்றையும் உறிஞ்சி ஏப்பம் விட்டாலும் இறுதியிலே பழைய கருந்துளையாகவே எஞ்சும்.

ஈர்த்தென்னை ஆட்கொண்ட ...

இறைவன் தடுத்தாட்கொள்ளத் திருவருள் கூடினால் அவன் தானே எழுந்தருளுவான். மார்க்கண்டேயர், கண்ணப்பர், மணிவாசகர், சுந்தரர் போன்ற பலருக்கும் அவன் இலகுவாகக் காட்சி கொடுத்துத் தன்பால் ஈர்த்தவன். அவ்வாறு ஈர்க்கப்பட்ட பின்னர் ஈர்க்கப்பட்டவர்கள் திசை மாறி வேறு வழி செல்ல முடியாது. அவனோடு இரண்டறக் கலப்பதே இறுதி நிலை. இதுவே முத்தி.

கருந்துளைகளாலே ஈர்க்கப்பட்ட எப்பொருளுமே பின்னர் தப்பிக்க இயலாது. அதனோடு இரண்டறக் கலந்து அக் கருந்துளைகளாகிவிட வேண்டியது தான்.

எந்தை பெருமானே

இங்குதான் இறைவன் தன்மை பூரணப்படுத்தப்படுகின்றது. அவன் வேறு யாருமல்ல. எமது தந்தை- எமது தலைவன்.

கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார்

கருந்துளைகளைக் கண்டு பிடித்த விஞ்ஞானிகளுள் ஒருவர் கலாநிதி ரிம் அக்ஸெல்றொட். இவர் எட்டு ஆண்டுகள் இரவு பகலெனக் கண்விழித்து- மற்றையோரின் நகைப்பிற்குக்கூட ஆளாகி- ஏறத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ இரண்டு கோடி நட்சத்திரங்களைப் பார்த்து— ஆராய்ந்து— இறுதியிலே கண்டு பிடித்தார். அத்தனை காலமும் அலுக்காமலும் மனம் சோர்வடையாமலும் வானத்தையும் வானத்தை நோக்கி எடுத்த படங்களையுமே பார்த்தார். எட்டு ஆண்டுகளிலே காணாத காட்சியை ஈற்றிலே கண்டார்.

அது போலவே மெய்ஞ்ஞானமும். நோக்கம் ஒன்றாகவும் இறுக்கமாகவும் அமையவேண்டும். அதனை அடையும் முயற்சியிலே சோர்வு இருத்தலாகாது. முயற்சியே திருவினையாக்கும்.

*இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்*
*எங்கெழுந்து அருளுவது இனியே.*

என்று மிகவும் திடமாகவும் இறுக்கமாவும் அவன் அடியிணைப் பற்றுவோமாக.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் !!**

**கட்டுரையின் நோக்கம்:**

திருநாவுக்கரசர் *முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்* என்னும் திருப்பாடலிலே இறையனுபவத்தை நேரே கூறாது காதலன் கால்களிலே தன்னை முற்றாக அர்ப்பணித்த காதலியை மட்டுமே வர்ணிக்கின்றார். இந்த உவமானத்தின் உவமேயமாக இறை மீதான காதல் மிக்க ஆன்மா கருத்திற் கொள்ளப்பட்டது. அது போலவே கரும்பொருள் பற்றியும் குறிப்பாகக் கருந்துளைபற்றியும் விஞ்ஞானிகள் வர்ணிக்கும் போது வரிக்கு வரி கடவுளையே நினைவூட்டின. தாசியாக வாழ்ந்தும் முன்வீட்டிலுள்ள முனிவனையே எண்ணி வாழ்ந்து மனத்தூய்மை பெற்றவள் இறுதியிலே முத்தி பெற்றது போல நாமும் விஞ்ஞானத்தினூடே மெஞ்ஞானத்தை உணர்ந்து நன்மைபெறுவோமாக.

அன்றைய வாழ்வு நெறியிலே காட்டப்பெற்ற நாவுக்கரசரின் உவமை அன்றைய மூளையை எட்டவல்லது. இன்றைய விஞ்ஞான மூளைகளுக்கு விஞ்ஞான உவமானங்கள் வலிவு சேர்க்கவல்லன. அதுமட்டுமன்றி இக்கட்டுரையின் விஞ்ஞான உவமைகள் வெறுமனே உவமைகள் மட்டுமல்ல. அதனினும் பல படி மேலே சென்று தன்மைகளிலும் இயக்கங்களிலும் ஒற்றுமைகள் பலவற்றைக் கொண்டிருப்பதையும் உணரலாம்.

**உசாத்துணை நூல்கள்:**


1. விஷு ஆண்டுக்கான பஞ்சாங்கம்— வாக்கியம் அல்லது திருக்கணிதம்.
2. The usborne Internet linked Science Encyclopedia 2000.
3. Kingfisher Visual Encyclopedia of Science 1995.


இக்கட்டுரை விஷு ஆண்டு ஆவணித் திங்கள் மூன்றாம் நாள் (18.08.2001) சனிக்கிழமையன்று இலண்டனின் தென்மேற்குப் பகுதியிலுள்ள விம்பிள்டன் விநாயகர் ஆலய மண்டபத்திலே நடைபெற்ற பிரித்தானிய சைவக் கோயில்கள் ஒன்றியத்தின் நான்காவது சைவ மாநாட்டின் முதனாள் நிகழ்விலே படிக்கப்பட்டது.

## புதுக்கவிதையும் இலக்கணமும்

தமிழ் நூல்கள் நிறைய வெளிவருதல் வேண்டும். எளிய நடையில் ஏற்றம்தரும் கருத்துக்கள் அடங்கிய தமிழ் நூல்கள் பலப்பல படைத்திடுதல் வேண்டும். நாளும் இலக்கிய மரபுகள் மாறுகின்றன. புதிய கவிதைகள் தோன்றி வளர்ந்து வருகின்றன. இந்தப் புத்திலக்கியங்கள் யாப்பியலுக்கு ஒத்து வராதவை என்பது வெளிப்படை. அதனால் இவை அனைத்தையும் ஒதுக்கிவிட முடியுமா? ஒதுக்கி விட இயலாது. ஒதுக்கவும் கூடாது. தோன்றும் இலக்கியங்களுக்குத் தான் இலக்கணங்கள். உணர்வுகளால் உந்தப்பட்டு வெளிவரும் புதுக்கவிதைகளுக்கும் இலக்கணம் செய்யவேண்டும். கற்றோர் புதிய இலக்கணப் புத்தகங்கள் எழுதுதல் வேண்டும்.

### லிங்கம் என்பதன் பொருள்

லிங் — லயம்
கம் — தோற்றம்
உலகு தோன்றி ஒடுங்கும் இடம். லிங்கம்

அல்லது

லிம் — உலக முடிவில் எல்லா சராசரங்களும் லயிப்பதற்குரிய இடம்.
கம் — அவ்வாறு லயித்த பொருட்கள் அனைத்தும் அதிலிருந்தே வெளிப்படுவது.

அல்லது

லிங்கம் — பிரகாசம்

அதாவது படைத்தல் முதலிய ஐந்தொழில்களால் உலகைப் பிரகாசம் செய்வது.

அல்லது
லிங்கம் — அடையாளம்
அதாவது பரம்பொருளாகிய அடையாளம்.

## இறைவனுக்குரிய ஐந்து முகங்களும் அவற்றுக்குரிய திக்குகளும்:

சத்யோஜாதம் — வடக்கு ஈசானம் — வடக்கு தத்புருஷம் — கிழக்கு
அகோரம் — மேற்கு வாமதேவம் — மேற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசற்ற மனித நேயம்

உலகம் விஞ்ஞான ஒளிவீச்சின் கிரணங்களுக்குள்ளே கண்களைச் சிமிட்டிக் கொண்டிருக்கிறது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் மெஞ்ஞானத்தின் தளர்ச்சியும் மனிதனை சஞ்சலத்துக்குள்ளாக்குவதையும் நாம் மறுப்பதற்கில்லை.வாழ்க்கை வசதிகளை இலகுவாக்கிக் கொண்ட விஞ்ஞானம் ஒன்றுபட்ட அமைதியான குடும்ப வாழ்க்கைக்கு மனஅமைதியையோ சந்தோசத்தையோ தருவதில்லை. மனிதவாழ்கை என்பது திடீரெனத்தோன்றி மறையும் மின்னலைப்போன்றது. இந்நீர்க்குமிழி வாழ்க்கை பல ஞானிகளையும் தீர்க்கதரிசிகளையும் கோட்பாட்டாளர்களையும ஆத்மீகவாதிகளையும் உருவாக்கத் தவறவில்லை. இவ்வுருவாக்கத்தின் அடிப்படையாய் விளங்கி நின்றதும் ஆன்மீகத்தின் தத்துவங்களே என்றால் மிகையாகாது.

ஜீவாத்மா எதையுமே தானாக அறிந்து கொள்வதில்லை. அறிவிக்கவே அறியும் இயல்புடையது இதுவே ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையிலுள்ள தூரமாகவே கணிக்கப்படுகிறது.

வாழ்க்கையானது மாயையின் பிடிக்குள்ளே அறியாமை என்னும் இருளுக்குள் அமிழ்ந்திக்கொண்டிருக்கும் மனித வாழ்வியலை தூசி தட்டிப்பார்க்கின்ற தன்மயை ஆழமாக உற்று நோக்கும் அவதானத்தை ஆன்மார்த்தமாக உணர்ந்து கொள்வதே வாழ்க்கைச்சிறப்பு எனக் கருதப் படுகின்றது.

ஜீவாத்மா எதையுமே தானாக அறிந்து கொள்வதில்லை. அறிவிக்கவே அறியும் இயல்புடையது இதுவே ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையிலுள்ள தூரமாகவே கணிக்கப்படுகிறது. இவ்விடைத் தூரமே ஆத்மாவை திசை திருப்பக்கூடிய எண்ணங்களைத் தோற்றுவித்து மனம் வாக்கு காயத்தினால் உண்டாகக்கூடிய துன்மார்க்கங்களை உண்டுபண்ணி விடுகின்றது. இப்புலன்களை ஒருநிலைப்படுத்தும்தூய சக்தி இறைவனிடம் மட்டுமேயுள்ளது என்று நினைப்பது தவறு.

பஞ்சமா பாதகங்களின் உறைவிடமாக இருக்கின்ற எம் மனமே காரணமாகிவிடுகின்றது. (மனம் வாக்கு காயம்) மனத்தினால் உண்டாகும் எண்ணங்களின் வெளிப்பாடு வார்த்தையாகி வார்த்தைகளின் உந்தல்களினால் காயமாகிய உடம்பும் தொழிற்படுவதால் இவ் அவயங்களுங்குரிய ஆத்மா பாவத்திலேயே வீழ்ந்துவிடுகின்றுத. இத்தகைய இயல்புகளே ஆத்மாவை தீயவழியில் வழி நடத்திச் செல்கின்றது.

இவற்றிலிருந்து நாமும் எம்மை பாதுகாத்துக் கொள்ளவேண்டிய நிலையை நாமே உணருதல் அவசியமானதொன்றாகும். வாழ்க்கையென்ற படிக்கட்டுக்களில் பாதங்களை ஊன்றிவிட்ட மனித குலம் விரைவாகவே படிக்கட்டுக்களை தாண்டிவிட வேண்டும் என்று எத்தனிக்கிறது.

